1977 ஜூலை 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கு எதிர்க்கட்சித் தலைவர்தான் உங்களுக்குச் சொல்ல வேண்டும். நான் சொல்வதில் அர்த்தமில்லை. கேள்விகளில் எதை அனுமதிக்க வேண்டும், எதை அனுமதிக்கக் கூடாது என்பது பேரவைத் தலைவரின் விருப்பம். காரணம் காட்டித்தான் மறுக்கப்பட்டு பதில் வந்திருக்கும். அதை அவையிலே சொல்லக் கூடாது. அந்தப் பிரச்னைக்கே பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(ஆ) 1977 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, 1977 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.